## யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்

## முதலாந் தவணைப்பரீட்சை - 2018

| தரம் - 07 | வரலாறு | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ......................

### பகுதி I

❖ மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. முற்காலத்தில் எமது நாட்டவர்களில் பெரும்பாலானோர் எங்கு வாழ்ந்தனர்
    1) கிராமம்　2) நகரம்　3) மாநகரம்　4) மாகாணம்

02. ஆரம்பகாலத்தில் இலங்கையில் வாழ்ந்தவர்களின் பிரதான வாழ்வாதாரத் தொழில்
    1) மீன்பிடி　2) விவசாயம்　3) வர்த்தகம்　4) கைத்தொழில்

03. எந்த மன்னனுடைய காலத்தில் சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதாக மகாவம்சம் குறிப்பிடுகிறது
    1) வசபன்　2) மகாசேனன்　3) காவந்திஸ்ஸ　4) பராக்கிரமபாகு

04. இரண்டாம் காசியப்பனின் மகன்
    1) பராக்கிரமபாகு　2) தாதுசேனன்　3) திஸ்ஸன்　4) மானவர்மன்

05. முதலாம் சேன மன்னனின் ஆட்சிக்காலம்
    1) கி.பி 833–853　2) கி.பி 684–718　3) கி.பி 1055–1110　4) கி.பி 1017–1070

06. கிரிகெரி என் குறிப்பிடப்பட்டட விலங்கு எது?
    1) சிங்கம்　2) பசு　3) ஆடு　4) கோழி

07. வரலாற்று மூலாதாரங்களில் நிகம் எனக்குறிப்பிடப்படுவது
    1) மாவட்டம்　2) நகரம்　3) கிராமம்　4) குடியிருப்பு

08. இரண்டாம் தப்புல மன்னன் எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்
    1) 10　2) 18　3) 16　4) 20

09. இலம்பகர்ண வம்சத்தைச் சேர்ந்த மன்னன்
    1) காசியப்பன்　2) தாதுசேனன்　3) ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன்　4) வசபன்

Education கல்வி

10. கும்பகார என அழைக்கப்பட்டவர்கள்

1) மட்பாண்டம் செய்வோர் 2) இரத்தினக்கல்பட்டை தீட்டுவோர்

3) நெசவு செய்வோர் 4) மீன்பிடிப்போர்

11. பாதிகாபய மன்னனால் ருவன் வெலிசாயாவை அலங்கரிப்பதற்கு அணிகலங்களும் கண்ணாடிமணிகளும் கொண்டுவரப்பட்டது?

1) சீயம் 2) உரோமாபுரி 3) இந்தியா 4) சீனா

12. முற்காலத்தில் இரத்தினதுவீபம் என அழைக்கப்பட்ட நாடு

1) இந்தியா 2) இலங்கை 3) தாய்லாந்து 4) யாழ்ப்பாணம்

13. எந்த மன்னனுடைய காலத்தில் பௌத்த சமயம் இலங்கையில் அறிமுகமானது?

1) இராஜசிங்கன் 2) தேவநம்பியதிஸ்ஸன் 3) வசபன் 4) தாதுசேனன்

14. விவசாயியாக வேடம் பூண்டு வயல் ஒன்றில் அறுவடைக்குச் சென்ற மன்னன் யார்

1) பராக்கிரமபாகு 2) துட்டகைமுனு

3) மகாசூலிமகாதிஸ்ஸ 4) தேவநம்பியதிஸ்ஸ

15. "மதுபாச்சிகா" என்று மூலாதரங்களில் குறிக்கப்பட்டவர்கள்

1) போர்வீரர்கள் 2) விவசாயிகள்

3) சமையற்கலைபெண்கள் 4) மந்திரிகள்

16. மானவர்ம மன்னனுக்கு உதவி வழங்கிய தென்னிந்திய அரவுகளில் ஒன்று

1) பல்லவ அரசு 2) பாண்டிய அரசு 3) சேர அரசு 4) சோழ அரசு

17. "சேன" என சேனைப்பயிர்ச் செய்கையைக் குறிப்பிட்ட நூல்

1) மகாவம்சம் 2) சூளவம்சம் 3) கல்வெட்டுக்கள் 4) உம்மக்கஜாதக

18. காவந்திஸ்ஸ மன்னனுடைய காலத்தில் ஐந்து சகோதரர்களால் சேனையில் பயிரிடப்பட்ட பயிர்

1) உளுந்து 2) பயறு 3) சோளம் 4) குரக்கன்

19. துட்டகைமுனுவின் மகன் எவ்வாறு அழைக்கப்பட்டான்

1) சேனன் 2) காவந்திஸ்ஸ 3) சாலியகுமார் 4) வசபன்

20. பசுக்களை வளர்ப்போர் வாழும் இடம் எவ்வாறு அழைக்கப்பட்டது

1) கோபலகம 2) தம்பகர 3) வாபிகம 4) நகரம்

(20X2=40புள்ளிகள்)

## பகுதி II

❖ ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

01)

1) முற்கால மக்களின் வாழ்வாதரத் தொழில்கள் மூன்றும் எவை?

2) புராதன காலமக்கள் விவசாயத்தை எத்தனை பிரிவாகப் பிரித்தனர். அவை எவை?

3) உலகின் புராதன விவசாய முறையாக கருதப்படுவது எது?

4) சேனைகளில் பயிரிடப்பட்ட பயிர்கள் 4 தருக.

(4X3=12 புள்ளிகள்)

02)

1) சேனைப் பயிர்ச்செய்கை என்றால் என்ன?

2) நவதெனி சேனை என்றால் என்ன?

3) கிராமக்குளங்களை அமைத்தவர்களை எவ்வாறு அழைத்தனர்

4) நெற் செய்கை மேற்கொள்ளப்படும் பருவங்கள் எவை?

(4X3=12 புள்ளிகள்)

03)

1) அனுராதபுர காலத்தின் முற்பகுதியில் ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் மூவரினை எழுதுக.

2) மோரிய வம்சத்தைச் சேர்ந்த மன்னன் யார்?

3) மானவர்மன் ஒளித்து வாழ்ந்த போது ஆட்சியாளனாக இருந்தவர் யார்?

4) கி.பி 684 ல் ஆட்சியைக் கைப்பற்றிய மன்னன் யார்?

(4X3=12 புள்ளிகள்)

04)

1) நெல்லைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட பகுதி எவ்வாறு அழைக்கப்பட்டது

2) களம், வேளாண்மைக்குதிர், சூடடித்தல் என்ற சொற்கனின் கருத்தைத் தருக?

3) விலங்கு வளர்ப்பில் மக்களால் வளர்க்கப்பட்ட விலங்குகள் எவை?

4) இவ்விலங்குகள் ஏன் வளர்க்கப்பட்டன.

(4X3=12 புள்ளிகள்)

05)

1) முற்கால மனிதர்களால் பயன்படுத்தப்பட்ட உலோகங்கள் எவை?

2) களிமண்ணில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் எவை?

3) வர்த்தகத்தின் இரு பிரிவுகளையும் தருக.

4) அத்தம் முறை என்றால் என்ன?

(4X3=12 புள்ளிகள்)

06)

1) வெளி நாட்டு வர்த்தகத்தில் முக்கியம் பெற்றிருந்த இலங்கையின் துறை முகங்கள் மூன்று தருக.

2) வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் எவை?

3) எல்லோரும் ஒன்றபட்டு ஒற்றுமையாகச் செயற்பட்ட விடயங்கள் எவை?

4) எமது முற்கால சமூகத்தின் பழக்கவழக்கங்களும் சம்பிரதாயங்கள் பற்றி எழுதுக.

(4X3=12 புள்ளிகள்)

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

**ஆரம்பம் - 01.12.2024**

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

## கட்டண விபரங்கள்

### தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

### English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

**075 287 1457**